www.agaram.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைக்குரிய மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 11 | தமிழ் இலக்கியநயம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................................

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**பகுதி - I**

**01.** 1. "தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தனிலே"

அ. "சையோகம்" என்பதன் கருத்து யாது?
ஆ. இங்கு சையோகமாக இருந்தவை எவை?

2. "மன்னுகமாலை வெண்குடையான்
வளையாச் செங்கோலது ஓச்சி"

அ. மன்னுகமாலை வெண்குடையான் எனப் போற்றப்படுபவர் யார்?
ஆ. வளையாச் செங்கோல் என்பதன் பொருள் என்ன?

3. "செஞ்சிலை மாரனும் கலகமே செயும் கண்
இதுவாம் என மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்."

அ. செஞ்சிலை மாரன் யார்?
ஆ. மலரம்புகளை வைத்து வணங்கியதற்கான காரணம் யாது?

4. "செய் செய் நான் எதைச் செய்தேனோ
அதைத்தான் நீயும் செய்து கிட்டு வர்றே"

அ. இக் கூற்று யாரால்? யாருக்கு கூறப்பட்டது?
ஆ. இங்கு "செய்" எனக் கூறப்படும் செயல் யாது?

5. "வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி
வேந்தர் மணி முடியும் கண்டீரோ தம்பி"

அ. வேந்தர்க்கு வேந்தரை எவ்வாறு அழைப்பர்?
ஆ. வேந்தர் மணிமுடி காணுதல் என்றால் என்ன? (5 x 4 = 20 புள்ளிகள்)

**02. கீழ்க்காணும் பாடற் பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தங்க வளைக் கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா - இதில்
அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்ததையா

கொட்டிய உப்புக் கசப்ப தென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறு கைக்குழந்தை யளைந்தது
தெய்வ அமுதமையா



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

ஆகக் கரிந்து பொரிந்ததென்றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேக வைக்காத தென்றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற் சத்தம் கேட்ட வதிப்பட்டு
ஓடி வருகையிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியிதையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாமொரு
சோதி மிளிருதையா.

1) இக் கவிதையில் இழையோடியுள்ள பிரதான கருத்து யாது?
2) கணவன் மீது மனைவி கொண்ட பாசம் வெளிப்படுமாறு
3) மனைவி சமைத்த உணவின் சிறப்பு
4) கவிஞரின் கவித்துவம் வெளிப்படுமாறு
5) தலைப்பின் பொருத்தப்பாடு. (30 புள்ளிகள்)

## பகுதி - II

**03. தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

காளைக் கன்றுக்குட்டிக்கு கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது. நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை. பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்து விடும் மாடசாமி சரியாகப் பால் சுரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில் அதைப் பிடித்துக் கட்டிவிட்டு கறக்கத் தொடங்கி விடுவான். அவன் கறந்து முடித்துவிட்டு அவிழ்த்துவிடும்போது மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

கன்றுக்குட்டி முட்டிப் பார்க்கும் மோதிப்பார்க்கும் கதறிப் பார்க்கும் இந்தத் துடிப்பைக் காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித்தொண்டையிலிருந்து குரல் எழுப்பும் குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.

தாய்ப்பசுவுக்கோ இந்த வேதனை தாங்கவே முடிவதில்லை. அதனால் என்ன செய்ய முடியும்? கன்றுக் குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால் துள்ளவும் முடிய வில்லை. குதிக்கவும் முடியவில்லை. தளதளவென்று சதைப்பிடிப்போடு இருக்க வேண்டிய மேனியில் எலும்புக்கூடு புறப்படத் தொடங்கியது. கன்று தாயை ஏக்கத்தோடு பார்க்கும். தாய் ஏக்கத்தோடு கன்றைப் பார்க்கும். இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் அடுத்த வீட்டுக் காளையோ மூச்சு விடுவதற்குப் பதிலாக நெருப்புக் கனலைக் கக்கும்.

இந்த சமயத்தில்தான் ஒருநாள் மாடசாமி வழியில் போய்க்கொண்டிருந்த மற்றொரு பால்காரனைக் கூப்பிட்டு அவனோடு ஏதோ பேச்சுக் கொடுத்தான். அந்தப் பால்க்காரனின் தோளிலும் ஒரு கன்றுக்குட்டி இருந்தது. ஆனால் அது உயிர் இல்லாத கன்றுக்குட்டி. தோலை உரித்து உள்ளே வைக்கோலைத் திணித்து ஏதோ குச்சிகளை வைத்துக் கட்டி சோளக்கொல்லை பொம்மை போல் ஒரு உருவத்தை வைத்துக் கொண்டிருந்தான்.

கிடாரிக் கண்ணுக்குட்டியாக இருந்தாலும் பரவாயில்லை. வளர்த்தாலும் பால் கொடுக்கும். நல்ல விலைக்கு யாரும் கேட்டால் கொடுக்கலாம்.

1) கன்றுக்குட்டியின் துயர நிலை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
2) கன்றுக்குட்டியின் தோற்றம் நாளுக்குநாள் எவ்வாறு இருந்தது?
3) கிடாரிக் கன்றுக்குட்டி என்றால் என்ன?
   அதனை விரும்புவதற்கான காரணம் என்ன?
4) மிருகங்களாக இருந்தாலும் அவற்றின் குடும்பப் பாங்கான தன்மை எவ்வாறு விளக்கப்படுகிறது?
5) மனிதரின் இரக்கமற்ற செயல் எவ்வாறு காட்டப்படுகிறது?

(25 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

❖ **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி - III**

**04.** எலியம் சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
1. கதையில் கையாளப்பட்ட மொழிநடை
2. கதையில் காணப்படும் அங்கதச் சுவை (15 புள்ளிகள்)

**05.** கிட்கிந்தா படலத்தை அடிப்படையாகக் கொண்டு
1. இலக்குமணனின் குணவியல்புகள்
2. தாரையின் மதிநுட்பம் (15 புள்ளிகள்)

**06.** கானல்வரி என்ற பாடப்பரப்பினை அடிப்படையாகக் கொண்டு
1. சோழ மன்னனின் பெருமை
2. காவிரி நதியின் வளம் (15 புள்ளிகள்)

**07.** தெளிவு என்ற சிறுகதையினை ஆதாரமாகக் கொண்டு
1. பாரூக் நானாவின் (தபால்காரன்) வறுமைநிலை
2. கதாசிரியரின் மொழிநடைச் சிறப்பு (15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk